செ.வெ.எண்:31 நாள்:13.07.2018

# அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரமுகர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்குச்சாவடி மையங்கள் சீரமைத்தல் - மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (13.07.2018) வாக்குச்சாவடி மையங்கள் சீரமைத்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரமுகர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குச்சாவடிகள் புதியதாகவும், இடமாற்றம் செய்யவும், பெயர்மாற்றம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 134- அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே 245 வாக்குச்சாவடிகளும், 5 புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை சேர்த்து தற்போது 250 வாக்குச்சாவடிகளும், 135 – கரூர் சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே 256 வாக்குச்சாவடிகளும், 5 புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை சேர்த்து தற்போது 261 வாக்குச்சாவடிகளும், 136 – கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே 249 வாக்குச்சாவடிகளும், 4 புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை சேர்த்து தற்போது 253 வாக்குச்சாவடிகளும், 137 – குளித்தலை சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே 262 வாக்குச்சாவடிகளும், 5 புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளை சேர்த்து தற்போது 267 வாக்குச்சாவடிகளும் என மொத்தம் 4 சட்டமன்ற தொகுதிகளிலும் சேர்த்து ஏற்கனவே 1012 வாக்குச்சாவடிகளும், 19 புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளையும் சேர்த்து தற்போது 1031 வாக்குச்சாவடிகளும் உள்ளன.

மேலும், 134-அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் 3 வாக்குச்சாவடிகள், இடமாற்றம் செய்யவும், 5 வாக்குச்சாவடிகள் பெயர்மாற்றம் செய்யவும், 5 வாக்குச்சாவடிகள் பிழை திருத்தம் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. 135-கரூர் சட்டமன்ற தொகுதியில் 3 வாக்குச்சாவடிகள் இடமாற்றம் செய்யவும், 3 வாக்குச்சாவடிகள் பெயர்மாற்றம் செய்யவும், 5 வாக்குச்சாவடிகள் பிழை திருத்தம் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. 136-கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 8 வாக்குச்சாவடிகள் இடமாற்றம் செய்யவும், 2 வாக்குச்சாவடிகள் பெயர்மாற்றம் செய்யவும், 2 வாக்குச்சாவடிகள் பிழை திருத்தம் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 137-குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 5 வாக்குச்சாவடிகள் இடமாற்றம் செய்யவும், 3 வாக்குச்சாவடிகள் பெயர் மாற்றம் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. 4 சட்டமன்ற தொகுதிகளிலும் சேர்த்து 19 வாக்குச்சாவடிகள் இடமாற்றம் செய்யவும், 13 வாக்குச்சாவடிகள் பெயர்மாற்றம் செய்யவும், 10 வாக்குச்சாவடிகள் பிழை திருத்தம் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி செல்வசுரபி, நகராட்சி ஆணையர் திரு.அசோக்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.கு.சரவணமூர்த்தி (கரூர்), திரு.லியாகத் (குளித்தலை), தேர்தல் வட்டாட்சியர் திரு.விஜயகுமார் வட்டாட்சியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக்கட்சி பிரமுகர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**